# “சிங்கிதி சாதய” புத்தகத்துடன் சிறுவர்களை பரவசப்படுத்திய மலிபன்

*சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டிருந்ததுடன், சமூக நற் பெறுமதிகளை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது*

60 வருடங்களுக்கு மேலாக, பிஸ்கட் ரசிகர்களுக்கு விருந்தளிக்கும் மலிபன் பிஸ்கட் மெனுபக்ஷரிஸ் லிமிடெட், தேசத்தின் சிறுவர்களுக்கு அவசியமான தினசரி போஷாக்கை பெற்றுக் கொடுத்து, அவர்களை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் திகழச் செய்வதில் முன்னிலையில் திகழ்கிறது.

நிறுவனத்தின் பெறுமதிகளை மேலும் உயர்த்தும் வகையில், “சிங்கிதி சாதய” எனும் புத்தகத்தை மலிபன் கோல்ட் மாரி பிஸ்கட் தொனிப்பொருளான ‘Tasty as much as mischievous’ (குறும்பைப் போன்று சுவை நிறைந்தது) என்பதுடன் வெளியிட்டிருந்தது. புகழ்பெற்ற சிறுவர் புத்தகங்கள் எழுத்தாளரான கலா கீர்த்தி சிபில் வெத்தசிங்க இந்த புத்தகத்தை எழுதியிருந்தார். மலிபனின் குறும்பைப் போன்று சுவை நிறைந்தது எனும் சிந்தனைக்கமைய, நற் பண்புகள் தொடர்பான புத்தாக்கமான சிந்தனைகளை இந்த புத்தகம் ஊக்குவிப்பதுடன், சிறுவர்களை குழுநிலை கட்டியெழுப்பல் மற்றும் சூழலை பாதுகாப்பது தொடர்பான முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பகிர்வு மற்றும் பராமரிப்பு தொடர்பான சமூக பெறுமதிகளையும் ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

சர்வதேச சிறுவர் தினத்துடன் இந்த புத்தகம் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், இந்நிகழ்வில் 10,000க்கும் அதிகமான சிறுவர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். மேலும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் விஹாரமகாதேவி பூங்கா பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர் தின கொண்டாட்டங்கள், பங்கேற்றிருந்த சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருந்தது. இதில் சிறுவர்களை ஈடுபடுத்தும் அம்சங்கள், நாட்டிய நிகழ்வுகள் போன்றன அடங்கியிருந்தன.

இந்த புத்தக அறிமுகம் தொடர்பாக மலிபன் குரூப் முகாமைத்துவ பணிப்பாளர் குமுதிகா பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “உலகை மாற்றுவதற்கு சிறுவர்கள் பயன்படுத்தக்கூடிய சாதனமாக அறிவை குறிப்பிடலாம். சிறுவர்களுக்கு சிறந்த சமூக பெறுமதிகள் மற்றும் நற்பண்புகளை போதிப்பதற்கு புத்தாக்கமான சிந்தனைகளை பெற்றுக் கொடுப்பதில் மலிபன் உறுதியாக கவனம் செலுத்தி வருகிறது. இதனூடாக சிறுவர்களுக்கு தம்மை தயார்ப்படுத்தி, தேசத்துக்கு பெறுமதி வாய்ந்த சொத்தாக மாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். சிறுவர்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் திகழச் செய்வதற்கு கடந்த பல ஆண்டுகளாக நாம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். அண்மையில் நாம் அறிமுகம் செய்திருந்த மலிபன் ABC LEARNIES பிஸ்கட் அதன் புத்தாக்கமான வடிவமைப்பு மற்றும் சுவை காரணமாக சிறுவர்கள் மத்தியில் பெருமளவு வரவேற்பைப் பெற்றுள்ளது. எதிர்காலத்தை மாற்றியமைப்பதில் முக்கிய சாதனமாக அறிவை நாம் பயன்படுத்தும் நிலையில், சிங்கிதி சாதய புத்தகத்தினூடாக சிறுவர்களின் நலனில் கவனம் செலுத்த முடிந்துள்ளதுடன், 60 ஆண்டு காலமாக நாம் பேணி வரும் வர்த்தக நாம கொள்கைகளை மேலும் உறுதி செய்யக்கூடியதாகவும் உள்ளது. சிறுவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை முறைகள் மற்றும் ஒழுக்கக்கோவை ஆகியவற்றை கொண்டதாக சிங்கிதி சாதய அமைந்துள்ளது.” என்றார்.

புத்தாக்கம், தரம் மற்றும் சுவை ஆகியவற்றில் மேற்கொண்டுள்ள தொழில்நுட்ப மேம்படுத்தல்களினூடாக, மலிபன் பிஸ்கட்ஸ் தொடர்ந்தும் நாட்டின் பிஸ்கட் துறையில் தனது ஆதிக்கத்தை பேணி வருகிறது. மேலும், புதிய தயாரிப்புகளான ஃபலூடா மாரி போன்ற வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் தயாரிப்பும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கோல்ட் மாரி போன்ற தனது தயாரிப்புகளை தரமான விற்றமின்களைச் சேர்த்து, நுகர்வோருக்கு முக்கியமான போஷாக்கை பெற்றுக் கொடுக்கும் வகையில் மெருகேற்றங்களையும் மேற்கொண்டுள்ளது.

2018 இல் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக, இலங்கையர்கள் அதிகம் விரும்பு வர்த்தக நாமமாக மலிபன் LMD சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர விருதுகளையும் சுவீகரித்திருந்தது. “தரம் என்பது எமது சமயம்” எனும் எமது ஸ்தாபகரின் கொள்கைக்கான அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் அமைந்திருந்தது.

**பட விளக்கம்:** மலிபன் குரூப் குமுதிகா பெர்னான்டோ முகாமைத்துவ பணிப்பாளர் (இடம்) கலா கீர்த்தி சிபில் வெத்தசிங்க (வலம்)